செ.கு. எண்: 191 நாள்: 24-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 24.5.2012

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், பழைய ஆதிதிராவிடர் காலனியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர் திரு மு. தனராஜ் என்பவர், 22.5.2012 அன்று தனது மாட்டுத் தொழுவத்தில் பால் கறக்கச் சென்றபோது, மாட்டுக் கொட்டகையின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயம் அடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திரு மு. தனராஜ் அவர்களின் மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் மரணமடைந்த திரு மு. தனராஜ் என்பவரின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9